இலவச வெளியீடு

# காலச்சுவடுகள்

காலம் -01 சுவடு –03 01/11/2008

**அமுலாக்கம் : தகவல் தொடர்பாடலுக்கான ஊடக வலைப்பின்னல் நிலையம், மன்னார்.**

**அனுசரணை : சர்வோதய சிரமதான சங்கம், மன்னார்.**

## இரண்டாவது வருடத்தில் எமது நிலையம்

தகவல் தொடர்பாடலுக்கான ஊடகவலைப்பின்னல் நிலையம் தனது செயற்பாட்டை அலுவலக ரீதியாக ஆரம்பித்து ஒருவருட பூர்த்தியை நினைவு கூர்ந்து இரண்டாம் ஆண்டில் உத்வேகத்துடன் பாதம் பதிக்கின்றது.

எமது நிலையம் ஊடகத்துறையில் முழு நேரச் செய்தியாளர்களாக செயற்பட்டு வருகின்ற சிலரால் மன்னாரை தளமாகக் கொண்டு தனது பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

இந் நிலையத்தின் இயக்குனராக திரு.ஜே.எம்.ஜோசவ் வெர்னாண்டோ (ஊடகவியலாளர்), ஆலோசகராக திரு.ஜனாப் மக்கள் காதர் (ஊடகவியலாளர்) வெளிக்கள இணைப்பாளராக திரு.எஸ்.ஆர்.லெம்பேட் (ஊடகவியலாளர்) சிரேஸ்ட ஆலோசகராக ஓய்வுபெற்ற அதிபரும் சமாதான நீதவானுமான திரு.என்.ஜெயபாலசிங்கம் அவர்களும், நிர்வாக மற்றும் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளராக செல்வி.எஸ்.சுஜிதாவும், தகவல் சேகரிப்பிற்கான இணைப்பாளராக செல்வி. கே.யசோதினி அவர்களும், தொழில்நுட்பவியலாளராக ச.சுதர்சன் அவர்களும் பணியாற்றி வருகின்றார்கள்.

முரண்பட்ட செய்தி வெளியீடுகளை தவிர்க்கும் முகமாக செய்தியாளர்களிடையே செய்தி பரிமாற்ற நடைமுறையையும், சமகால நிகழ்வுகளை திரிபுபுடுத்தாமல் வெளிப்படுத்தும் நடவடிக்கைகளையும், மக்களைத்தேடி ஊடகப்பயணம் என்னும் நிகழ்ச்சித் திட்டங்களையும் முன்னெடுத்துவருகின்ற நாம் எமது புதிய முயற்சியாக "காலச்சுவடுகள்" என்னும் இச்சஞ்சிகையினையும் இந்நிலையத்தின் சார்பாக வெளியிடுகின்றோம்.

எமது நிலையத்தின் செயற்பாடுகளுக்கு திணைக்கள் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களான (Sewa Lanka Foundation, Sarvodaya, FCE) ஆகியவை மற்றும் தனிநபர்கள் தமது ஆதரவை வழங்கி வருகின்றனர்.

இந்நிலையம் இல: 166, மூர்வீதி, சின்னக்கடை மன்னார். எனுமவிலாசத்தில் இயங்கி வருகின்றது. நாம் எமது செய்திச் சேவைகளுக்கும் அப்பால் கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், பெயர் மாற்ற அறிவித்தல்கள் ஆகிய விளம்பர சேவைகளையும் மேற்கொள்கின்றோம்.

**சுவடுகளில்......**

இரண்டாவது ........
நீதிபதியின் திடீர்......
மண்வாசனை .......
வீதிப்பாவனைக்கு.......
ஊடகவியலாளர்......
50 வருடத்தில.......
புதிய போக்குவரத்து...
கால அட்டவணை......
வரிச் செய்திகள்........
மன்னாரில் வட.......

எழுதிடும் பேனா
துடித்திடும் உள்ளம்
முடிந்திடும் மை
எனது ஆறாவது விரலான
பேனா முனை
என்றும் ஓயாது.......

உலகில் திட்டித் தீர்க்கும்
சில கூட்டம்
சுரண்டி வாழும்
மற்றொரு கூட்டம்
பதுக்கி வாழும் செல்வந்தர்கள்

வறுமையில் வாழும் ஏழைகள்
இந்த உலகில் இருக்கும்வரை
என் பேனா முனை என்றும்
ஓயாது......

மு.ஹ.றைசுல் ஹக்கீம்
30, மரைக்கார் வீதி
மருதமுனை -04

## நீதிபதியின் திடீர் இடமாற்றம் மன்னாருக்கு ஏற்பட்ட பாரிய இழப்பு

மன்னார் நீதிபதியின் திடீர் இடமாற்றம் நீதிக்குப் புறம்பான செயற்பாடுகளை ஊக்கப்படுத்துவதற்கு வாய்ப்பாக அமைந்துவருவதாக சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். மன்னார் மாவட்டத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் நீதிப் பணியை நேர்மையுடனும் இதய சுத்தியுடனும் மேற்கொண்டு வந்த மாவட்ட நீதிபதி T.J.பிரபாகரனின் திடீர் இடமாற்றத்தினால் மன்னார் மாவட்டம் அதிர்ச்சிக்குள்ளாகி இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

மன்னார் மாவட்டத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் முயற்சியில் பலத்த சவால்களுக்கும் மறைமுக அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுத்த நிலையிலும் தனது நீதிப்பணியை துணிச்சலோடு முன்னெடுத்த நீதிபதியின் திடீர் இடமாற்றத்தில் சந்தேகங்கள் நிலவுவதாக சமூக ஆர்வலர்கள் கருதுகின்றார்கள்.



படு கொலைகள், ஆட்கடத்தல்கள், கப்பம்கோரல், அச்சுறுத்தல்கள் போன்ற விடயங்களில் குற்றவாழிகள் இனங்காணப்படவேண்டும் என்றும், அப்போதுதான் நீதியின் மீது மக்களுக்குள்ள நம்பிக்கையைக் கட்டிக்காக்க முடியும் எனும் நிலைப்பாட்டைக் கொண்டிருந்த ஒரு நீதிபதியின் இடமாற்றம் மாவட்டத்திற்கு பாரிய இழப்பாகத்தான் இருக்கின்றது

*மன்னாரின் புதிய நீதிபதியாக A. யூட்சன் 01/12/2008 முதல் பதவி ஏற்றுள்ளார். இவரை மன்னார் மாவட்டம் சார்பாக வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.*

சட்டத்தின் வழியில் நீதியை நிலைநாட்டி சிவில் நிர்வாகத்தின்
சிகரத்தை சுட்டிக்காட்டும் புணியில் அர்ப்பணிப்போடும்,
துணிவோடும் செயல்பட்ட மா.நீதிபதி. T.J.பிரபாகரன்

**J.M.ஜோசப் வெர்னாண்டோ**

Centre for Mass Communication & Media Network(CMCMN)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்வாசைன இலக்கியங்கள் பிரதேச வாதம் அல்ல – மன்னார் பிரதேச செயலாளர்

மண்வாசைன இலக்கியங்கள் படைக்கப்படும் போது அவற்றை பிரதேச வாதமாக பார்க்கக்கூடாது என மன்னார் பிரதேச செயலாளர் தெரிவிக்கின்றார்.
எழுத்தாளர் S.A.உதயன் எழுதிய "லோமியா" எனும் நாவல் இலக்கிய அறிமுக விழா அண்மையில் பேசாலை பத்திமா மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றிருக்கின்றது. இதில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே மன்னார் பிரதேச செயலாளர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல் மேற் சொன்ன கருத்தை தெரிவித்தார்.
நெய்தல் நில மக்களின் வாழ்க்கைமுறை கடந்த 80 ஆண்டுகளுக்கு முன் எவ்வாறு இருந்தது என்பதை வெளிக்காட்டும் முகமாக ஆசிரியர் S.A.உதயனால் எழுதப்பட்ட லோமியா எனும் நாவல் பிரதேசத்தின் மண்வாசனையை வெளிப்படுத்தியிருப்பதாக தெரிவிக்கின்றார்.மண்வாசனை இலக்கியங்களை பலர் பிரதேச வாதமாக பார்க்கின்றநிலை இன்று நிலவுவதால் அவற்றிலிருந்து விடுபடவேண்டிய தேவை இன்றைய காலத்தின் கட்டாயமாக இருக்கின்றது என தெரிவித்ததோடு மண்வாசைன மிக்க இலக்கியப்படைப்புக்களே ஒரு சமூகத்தின் தனித்துவத்தையும், வாழ்க்கை முறையையும் அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்வதாகவும் பிரேதச செயலாளர் தெரிவிக்கின்றார்.
லோமியா எனும் மேற்படி நாவலை எழுதிய ஆசிரியர் S.A.உதயன் கலைத்துறை சார்ந்த பல இலக்கியப்படைப்புக்களை அரங்கேற்றி தேசியரீதியிலும் தமிழ் நாட்டிலும் பாராட்டுக்களைப்பெற்ற பாடசாலை ஆசிரியராகவும் கடமையாற்றிவரும் இவர் மன்னார் மாவட்டத்தில் கடந்தகாலங்களில் வெளிவந்த காலநதி பத்திரிகையின் பிரதான ஆசிரியராகவும் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.
*இவரது படைப்பாற்றல் பிரவேசம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு மாவட்டத்தின் வளர்ச்சியில் பாதம் பதிக்க வேண்டும் என எமது நிலையம்சார் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.*

**இலக்கியப் படைப்புக்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி**

S.சுகிதா

## வீதிப்பாவனைக்கு இடையூறு விளைவிப்போருக்கு எதிரா நடவடிக்கை எடுக்க வேண்டும்

வீதிப்பாவனைக்கு இடையூறாக செயல்படும் பாடசாலை மாணவர்கள்மீது சட்டரீதியான நடவடிக்கையினை மேற்கொள்ள பொலிஸார் முன்வரவேண்டும் எனபாவனையாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

மன்னாரின் நகர மையப்பகுதிகள் மற்றும் புறநகர்ப்பகுதிகளில் வீதி பாவனையாளர்களுக்கு இடையூறாக பாடசாலை மாணவ மாணவிகள் செயல்ப்படுவதால் அவசர தேவைகள் நிமித்தம் வீதியால் செல்பவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்றுவரும் நேரங்களில் மாணவ மாணவிகள் வீதிகளில் சமாந்தரமாக பயணிப்பதால் ஏனைய வீதிப்பாவனையாளர்கள் தமது தேவைகளுக்காக வீதியால் சென்று திரும்ப முடியாமல் இருப்பதாகவும் இது தொடர்பாக பாடசாலை ஆசிரியர் அதிபர்களின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தும் எதுவித நடவடிக்கைகளும் இதுவரையிலும் மேற்கொள்ளப்படவில்லையென தெரிவிக்கும் பாவனையாளர்கள் பொலிஸார் இது விடயத்தில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என தெரிவிக்கின்றனர். மன்னார் நகரில் தேசிய பாடசாலைகள உள்ளடங்கலாக நான்கு பாடசாலைகள் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கி.யசோதினி

## ஊடகவியலாளர் நிமலராஜனின் படுகொலையுடன் சம்மந்தப்பட்ட சூத்திரதாரியை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் -- மன்னார் தகவல் தொடர்பாடலுக்கான ஊடகவலைப்பின்னல் நிலையம்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் தொடர்பான சூத்திர தாரிகள் விரைவில் சட்டத்திமுன் நிறுத்தப்பட வேண்டும் என மன்னார் தகவல் தொடர்பாடலுக்கான ஊடகவலைப்பின்னல் நிலையம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

ஊள் நாட்டு மற்றும் சர்வதேச செய்திச் சேவைக்கான யாழ் மாவட்ட செய்தியாளராக கடமையாற்றிய நிமலராஜன் செய்தித்தயாரிப்பில் ஈடுபட்டிருந்தபோது இரவு வேளையில் அவரது வீட்டில் வைத்து இனம் தெரியாத ஆயுத தாரிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். ஊடகவியலாளர் படுகொலை செய்யப்பட்டு எட்டுவருடங்கள் கடந்த நிலையில் அது தொடர்பான விசாரணைகள் மந்த கதியில் இடம்பெற்று வருவதால் குற்றவாளிகள சட்டத்தின்பிடியில் இருந்து தப்பிக்கொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது.ஊடகத்துறையினருக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் மேற் கொள்ளப்பட்டு வருகின்ற அனைத்து மட்ட விசாரணைகளும் ஊடகத்துறை சார்ந்தோருக்கு நம்பிக்கையீனங்களைத் தோற்றுவிக்கின்றது. ஜனநாயகத்தின் மீதும் உள்ள நம்பிக்கையை செயலிளக்கச் செய்வதாக அமைகின்றது. இது போன்ற விடயங்களை நிவர்த்தி செய்ய வேண்டும் என மன்னார் தகவல் தொடர்பாடலுக்கான ஊடகவலைப்பின்னல் நிலையம் மேற்படி அறிக்கையில் கேட்டுள்ளது.



அலுவலகம்

இலங்கையில் தமது தொழிலை சரியாக செய்யப்போய், மக்களுக்கு நன்மை செய்யப்போய்
மனித சேவையில் ஈடுபடப்போய் குற்றவாழிகளை அடையாளம் காணப்போய் கூடிய உயிர்த்தியாகங்களைச் செய்தவர்கள்
பத்திரிகையாளர்களே! (சி.வி.விக்னேஸ்வரன் - ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதி அரசர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலன்புரி நிலையங்களில் தீ அணைப்புப்பயிற்சி

மன்னார் சர்வோதய சிரமதான சங்கம் புலம் பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பு (IOM) நிறுவனத்தின் அனுசரணையுடன் நானாட்டான் பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட கோவில் வளாகம், சிறுக்கன்டல், களிமோட்டை ஆகிய நலன்புரி நிலையங்களில் வசிக்கும் சுமார் 800க்கும் மேற்பட்டவர்களுக்கு தீ அணைப்பு மற்றும் தனி மனித பாதுகாப்பு தொடர்பான செயல்முறைப் பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் அண்மையில் ஏற்பட்ட தீ விபததை அடுத்தே மன்னார் மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோர் வாழும் நலன்புரி நிலையங்களில் மக்களை தீ விபத்தில் இருந்து பாதுகாக்கும் நோக்குடன் அவர்களுக்கு தீ அபாயம் தொடர்பான விழிப்புணர்வை முழுமையாக வழங்குவதே மேற்படி அமைப்பின் நோக்காக இருக்கின்றது. மேலும் இப்பயிற்சியுடன் கூடிய தீ அனைப்பு தொடர்பான உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.இத்திட்டத்தினை அடுத்து நானாட்டான் பிரதேச செயலாளரின் வேண்டு கோளுக்கிணங்க இடம்பெயர்ந்த நிலையில் நண்பர்கள், உறவினர்களுடன் தங்கி வாழும் மக்களுக்கு மேற்படி விழிப்புணர்வுத் திட்டத்தினை தொடர்ந்தும் நடாத்துவதற்கு மன்னார் சர்வோதய அமைப்பு ஏற்பாடுகளை செய்து வருகின்றது.

**50 வருடத்தில் இருந்து புதிய நூற்றாண்டின் உதயத்தை நோக்கிய சர்வோதயத்தின் பயணம்**

மேற்படி செயல்முறை பயிற்சிகளில் மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் தமது ஒத்துழைப்புக்களை தொடர்ந்தும் வழங்கி பயனடைந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

*அரை நூற்றாண்டு நிறைவை கொண்டாடும் சர்வோதயத்தின் ஆன்மீக சமூக பணிகள் தொடரும் காலங்களிலும் உத்வேகத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என எமது நிலையம் சார்பாகவும், மன்னார் மாவட்டம் சார்பாகவும் வாழ்த்தி நிற்கின்றோம்*

சர்வோதயம்,
முதலாம்
குறுக்குத்தெரு,
பெற்றா, மன்னார்.
தொ.பே– 023 2222374

## புதிய போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மன்னார் பிரதேச செயலகப்பிரிவிற்கு உட்பட்ட மூன்று கிராமங்களுக்கு புதிய போக்குவரத்துச் சேவையினை நகர பிரதேச செயலாளர் ஆரம்பித்து வைத்துள்ளார்.

மன்னார் கீரி, தரவன்கோட்டை, சாந்திபுரம் பகுதிகளில் வசித்துவரும் மக்கள் கடந்த 10வருட காலங்களாக பொது போக்குவரத்து இன்றி சிரமங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் பிரதேச செயலாளர் திருமதி.ஸ்ரான்லி டிமெல் மேற்கொண்ட முயற்சியால் மேற்படி கிராமங்களுக்கான போக்குவரத்து சேவை கடந்த 12/10/2008 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச்சபையின் மன்னார் சாலைக்குச் சொந்தமான பேருந்துகள் மேற்குறிப்பிட்ட கிராமங்களுக்கான போக்குவரத்தில் நாளாந்தம் ஈடுபடும் எனவும் அவை கீரியிலிருந்து புறப்பட்டு தரவன்கோட்டை, மற்றும் சாந்திபுரம் பகுதிகளுக்கூடாக மன்னார் நகரத்திற்கிடையே சேவையில் ஈடுபடும் என பிரதேச செயலாளர் மேலும் தெரிவிக்கின்றார்.

மேற்படி போக்குவரத்துச் சேவையின் மூலம் கால்நடையாக பாடசாலைக்குச் சென்று வந்த மாணவர்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றார்கள்.


S.R.லெம்பேட்

## கால அட்டவணையைக் கருத்தில் கொண்டு பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வேண்டும்

நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் விவசாய திணைக்களத்தோடும் நீர்ப்பாசன திணைக்களத்தோடும் இணைந்து கால அட்டவணைக்கு அமைவாக தமது விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என மன்னார் அரசாங்க அதிபர் தெரிவிக்கின்றார்.

மன்னாரில் தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ள நிலையில் விவசாயிகளின் தொழில் முயற்சிகள் எவ்வாறு அமைந்திருக்கின்றது எனும் கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே மன்னார் அரசாங்க அதிபர் A.நிக்கலொஸ்பிள்ளை மேற் சொன்னவாறு தெரிவித்திருக்கின்றார்.

விவசாயிகள் கால அட்டவணையைக் கருத்தில் கொண்டு பயிர்ச்செய்கையில் ஈடுபடும்போதே கணிசமான பலன்களைப் பெறமுடியும் என தெரிவிக்கும் அரசாங்க அதிபர் கடந்த காலபோக செய்கை மழை வெள்ளத்தில் மூழ்கியதன் காரணமாக ஆயிரக்கணக்கான விவசாயிகள் நஸ்டம் அடையும் நிலைக்கு தள்ளப்பட்டு அதற்கான நஸ்ட ஈடுகளைக்கூட பெற முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. விவசாயிகளை நஸ்டம் அடையும் நிலையில் இருந்து காப்பாற்றுவதற்காக தாம் விவசாய மற்றும் நீர்ப்பாசன திணைக்களங்களுடன் இணைந்து பயிர்ச்செய்கைக்கான பொதுவான கால அட்டவணை ஒன்றை தயாரித்து விவசாயிகளுக்கு வழங்கியிருக்கும்போது அவர்கள் அவ் அட்டவணைக்கு ஏற்ப தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதே சிறந்த பாதுகாப்பான வழியாக இருக்கும் எனவும் விவசாயிகள் காப்புறுதிகளை மேற்கொள்வது எதிர்காலத்தில் ஏற்படும் எதிர்பாராத இழப்புக்களை ஈடுசெய்வதற்கு உதவியாக இருக்கும் எனவும் மன்னார் அரசாங்க அதிபர் மேலும் தெரிவிக்கின்றார்




J.M.ஜோசப் வெர்னாண்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிச் செய்திகள்

- மன்னார் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட 09 கிராமங்களைச் சேர்ந்த போரினால் பாதிக்கப்பட்ட 40 மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி வலைகள் மற்றும் உபகரண தொகுதிகள் "ஜேர்மன் எக்கோ" திட்டத்தின் உதவியுடன் மன்னார் சேவாலங்கா மன்றத்தினால் வழங்கப்பட்டிருக்கின்றது.
- இளைஞர் விவகார அமைசசின் அனுசரனையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஏற்பாடு செய்திருந்த இளைஞர் ஊடக கலாசாலையானது மட்டக்களப்பு தாளங்குடா கல்வியல் கல்லூரியில் கடந்த 15 நாட்களாக டம் பெற்றது. இதில் வடக்கு கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களைச் சேர்ந்த 42 இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர்.
- மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசியபாடசாலையை அண்டிக்காணப்படும் காணியை இப்பாடசாலைக்கு வழங்கக்கோரி அண்மையில் அரச உயர் அதிகாரிகளிடம் மகஜர்கையளிப்பு இடம்பெற்றிருக்கின்றது.
- மன்னார் நகரிற்குள் சீமேந்துப் பொதிகளை எடுத்துச் செல்வதற்கு இதுவரை காலமும் நிலவி வந்த அனுமதிப்பத்திர முறையை இன்றுமுதல் (24.11.2008)ரத்து செய்திருப்பதாக கடற்படை அறிவித்துள்ளதாக மன்னார் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.
- 25/11/2008 அன்று பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பு தினங்களை (25 11/2008 – 10/12/2008) முன்னிட்டு மன்னார் அரச, அரசசார்பற்ற நிறுவன ஊழியர்களுக்கு வெண்பட்டி அணிவித்து நினைவு கூறப்படுகின்றது.
- சட்டரீதியாக ஸ்தாபிக்கப்பட்டு செயற்படாத எந்தவொரு அமைப்புக்களிடமும் விசாரணைகளை மேற்கொள்வதற்கான முறைப்பாடுகளை தெரிவிக்கக் கூடாதென முன்நாள் மன்னார் நீதவான் T.J.பிரபாகரன் எச்சரித்துள்ளார்.
- மன்னாரின் தற்போதைய நிலவரம், மிகுந்த கவலையை தோற்றுவித்திருப்பதாக தெரிவித்து அது தொடர்பான பத்திரிகை செய்தி அறிக்கை ஒன்றினை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ செல்வம் அடைக்கலநாதன் விடுத்துள்ளார்.
- வடமாகாணத்தில் விளையாட்டுத்துறைக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் S.வினோ நோகராதலிங்கம் பாராளுமன்றில் கடும் சீற்றம்.
- மன்னார் நகரில் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த வாகனங்களின் அதி வேகத்தை குறைப்பதற்கு வசதியாக வேகத்தடைகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

**சுஜிதா & யசோதினி**

## கலை இலக்கிய விழா ரத்து, மன்னாரின் சாபக்கேடா.......?

மன்னாரில் முதற் தடவையாக இடம்பெற இருந்த வட மகாண கலை இலக்கியவிழா இம்முறையும் ரத்துசெய்யப்பட்டமையானது கலைத்துறை சார்ந்தோர் மட்டில் அதிர்ச்சியை தோற்றுவித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது

மன்னாரில் சென்ற ஐப்பசி மாதம் 24ஆம் 25ஆம் திகதிகளில் நடைபெற இருந்த வட மாகாண தமிழ் கலை இலக்கிய விழா 24ஆம் திகதி பகல் 12 மணியளவிலேயே ரத்து செய்யப்பட்டிருக்கின்றது.

நிகழ்வு நடைபெற இருந்த பாதிநாள் முடிந்த பின்னரே ரத்து செய்யப்பட்டது தொடர்பான கடிதம் ஏற்பாட்டாளர்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கின்றது. நிகழ்வு தொடர்பான செய்திகள் ஊடகங்களில் அடிக்கடி வர வேண்டும் என விரும்பிய ஏற்பாட்டுக்குழு ரத்து செய்யப்பட்டது தொடர்பான தகவலை முன் கூட்டியே அறிந்திருந்தும் ஊடகங்கள் வாயிலாக அறிவிக்காமல் இருந்தமை கவலையை தோற்றுவித்திருந்தது.

ஒக்டோபர் 22ஆம் திகதி முதல் நகரின் பல இடங்களிலும் வதந்திகள் பரவின படித்தவர் மட்ட்த்தில் ஆரம்பித்து சாதாரண மக்களும் இது பற்றி கதைக்க ஆரம்பித்தார்கள். புலிகள் இவ்விழாவை விரும்பவில்லை என ஒருசாராரும் அமைச்சர் ஒருவரினால்ட இவ்விழா ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஒரு சாராரும் தெரிவித்திருந்தனர்.

மன்னாரில் முதன்முறையாக நடைபெற வேண்டிய இவ்விழா ஒத்திவைக்கப்பட்டதில் அதிசயங்கள் எதுவுமில்லை ஏனெனில் மன்னார் நிர்வாகத்தின் கையாலாகாத்தனமும் ஆழுமையின்மையும், அரசியல் அடிமைத்தனமுமே காரணம் என்பது பலரும் அறிந்த விடயமாகும். இதன் விளைவாக நாம் எல்லாவற்றையும் இழந்து விட்டோம்.

2005இல் சுமார் ஏழு கோடி ரூபா செலவில் மீழ்குடியேற்ற அமைச்சினால் மன்னாரில் நடைபெற இருந்த தேசிய மீலாத் விழாவும் முசலி மக்களின் மீழ் குடியேற்றத்திட்டமும் நடைபெறாமல் வவுனியா சூடுவெந்தபுளவு என்னும் கிராமத்தில் நடாத்தப்பட்டு செலவுக்கணக்கு காட்டப்பட்டது. இருப்பினும் மன்னாரில் சுமார் 100 வீடுகள் மட்டுமே அமைக்கப்பட்டன.

அதே ஆண்டு மன்னாரில் நடைபெற இருந்த வடக்குக் கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா பல பூர்வாங்க ஏற்பாடுகளின் பின்னரும் நடைபெறாமல் ரத்து செய்யப்பட்டது. உள்ளுர் கலைஞர்கள் தங்கள் சொந்த பணத்தை செலவிட்டு ஏமாற்றமடைந்தனர்.

2007இல் இங்கு நடைபெற வேண்டிய வட மாகாண தமிழ் இலக்கி விழா சகல ஏற்பாடுகளும் முடிவுற்ற பின்னர் உள்ளுர் கலைஞர்களுக்கு அறிவிக்காமல் வவுனியாவிற்கு மாற்றப்பட்டு அங்கு நடைபெற்றது. கடைசியாக 2008ஆம் ஆண்டு வட மாகாண கலை இலக்கிய விழாவும் ரத்து செய்யப்பட்டுள்ளது கடைசியாக கிடைத்த செய்திகளின்படி விரைவில் வவுனியாவில் நடைபெற உள்ளதாக அறியவருகின்றது.

இதனால் ஏமாற்றமடைந்த மன்னார் கலைஞர்கள், அறிஞர்கள் ஊடகவியலாளர்கள் நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள் துன்பங்களையும் செலவுகளையும் எவர் தருவார் இதுபோல் அரசியல் மயப்படுத்தப்பட்ட கடைசியில் நடைபெறாமல் போகும் விழாக்களுக்காக எவரையும் அழைக்க வேண்டாம் எனவும் அலைக்கழிக்க வேண்டாம் எனவும் சம்மந்தப்பட்டவர்களை தயவாக கேட்டுக் கொள்கின்றோம்.

இக் கலைஇலக்கிய விழா வவுனியாவில் நடைபெறுமாக இருந்தால் மன்னாரில் பிறந்த கல்வி மான்கள், கலைஞர்கள், புத்தி ஜீவிகள், ஊடகவியலாளர்கள் எவருமே அங்கு செல்லாமல் அவ்விழாவை பகிஸ்கரிப்பதுதான் மன்னார் மண்ணை நேசிப்பதாக அமையும்.

**M.A.காதர்**

"பலரை பல காலம் ஏமாற்றலாம்
சிலரை சிலகாலம் ஏமாற்றலாம்,
மன்னாரானை எக்காலமும் ஏமாற்றலாம் என்று நினைப்பவர்கள்
விரைவில் ஏமாந்து போவார்கள்."

குறிப்பு:-
ரத்து செய்யப்பட்ட நிகழ்வு தொடர்பான உண்மைத்தன்மையினை அறிந்து கொள்ளும்பொருட்டு எம்மால் மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்புகளுக்கான பொறுப்பு வாய்ந்த பதில்களை சம்மந்தப்பட்ட உள்ளுர் மற்றும் மாகாண மட்ட அதிகாரிகளும் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**SUJI**

இச்சஞ்சிகை எமது நிலையத்தில் வடிவமைக்கப்பட்டு [illegible] அனுசரணையுடன் SKY அச்சகத்தில் வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org